# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**OS.No. : 372/2022**

**நாள் : 18.07.2025**

**வா.சா.1 திரு. சுப்பையா –** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான்தான் இந்த வழக்கில் வாதி என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கொடுத்த 1 கோடி ரூபாய் பணத்தை வட்டியுடன் திரும்ப கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை எப்போது தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு அதுபற்றி நியாபகமில்லை. நான் 23.09.2022 ஆம் தேதி இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் அதுபற்றி நியாபகமில்லை. நானும் எனது மனைவியும் ஒரே விலாசத்தில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஜெகன்நாதன் எனக்கு என்ன வகையில் உறவு என்றால் உறவினர் என்று எனது பெற்றோர் சொன்னார்கள். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் சிட்பண்ட் தொழில்தான் செய்துவருகிறேன், தெரிந்த நபர்களுக்கு வட்டிக்கு பணம் கொடுப்பேன். அதற்கு அரசாங்கத்திடம் நான் ஏதேனும் உரிமம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பாங்க், கரூர் வைஸ்யா, ஐ.ஓ.பி, டி.எம்.பி பேங்க்கில் கணக்குகள் உள்ளன. எனது மனைவி என்ன தொழில் செய்கிறார் என்றால் வீட்டுக்குடித்தனம்தான், தெரிந்த நபர்களுக்கு அவரும் வட்டிக்கு பணம் கொடுப்பார்.

2) 1ம் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்றால் டெரி டவல் தயாரிக்கும் தொழில் செய்துவருகிறார். எனக்கும் 1ம் பிரதிவாதிக்குமிடையே இந்த வழக்கு பணப்பரிமாற்றங்களுக்கு முன்னர் என்னிடம்ஏதேனும் தொடர்பு வைத்திருந்தாரா என்றால் 2015ம் வருடம் சில முறை என்னிடம் பணம் வாங்கி

அதை திரும்ப செலுத்திவிட்டார். மேற்படி சங்கதி சம்பந்தமாக எனது பிராதில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மனைவி பிரதிவாதிகள் மீது 2 வழக்குகள் தாக்கல் செய்துள்ளார். அந்த OS No. 25/2024 வழக்கின் பிராதுதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த **OS No. 25/2024 வழக்கின் பிராது பி.வா.சா.ஆ. 1** ஆகும். மேலும் OS No. 61/2024 என்ற வழக்கு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். OS No. 61/2024 வழக்கின் பிராதுதான் என்னிடம் காட்டப்படுவது. அந்த **OS No. 61/2024 வழக்கின் பிராது பி.வா.சா.ஆ. 2** ஆகும். எனது மனைவி முறையே 1 கோடி ரூபாய் பணத்தை வட்டியுடன் திரும்ப கேட்டுதான் பிரதிவாதிகள் மீது மேற்படி வழக்குகளை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவி பிரதிவாதிகளுக்கு ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதி அவரது வழக்கறிஞர் மூலம் 17.09.2022ம் தேதியிட்ட பதிலறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மனைவி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு ஒப்புகை அட்டையில் கையொப்பம் இட்டுள்ளார் என்றும் அந்த ஒப்புகை அட்டைதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் என் மனைவியுடையதுதான்.

3) நானும் எனது மனைவியும் தாக்கல் செய்துள்ள வழக்குகளில் எந்த பணம் முதலில் கொடுக்கப்பட்டது என்றால் நான்தான் பிரதிவாதிக்கு முதலில் பணம் கொடுத்தேன். 01.12.2020ம் தேதியிட்ட ஆவண எண். 3664/2020 வாயிலாக 3ம் பிரதிவாதி திரு. லட்சுமணன் என்பவரிடமிருந்து சொத்து வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான கிரைய தொகையான 59 லட்சத்தை 19.11.2020ம் தேதி RTGS மூலமாக அனுப்பியுள்ளேன். ரூ.8,49,000/–த்தை 21.11.2020ம் தேதி RTGS மூலமாக அனுப்பியுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை, கரூர் வைஸ்யா வங்கியின் மூலமாக பணம் அனுப்பினேன். 1 கோடி ரூபாய் என்னிடம் ரொக்கமாக இருந்தது என்பதை

காட்டுவதற்கு நான் நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4) ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் கம்பெனி சட்டப்படி நிறுவப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் பி.எல் ஜெகநாதன் மட்டும்தான் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். அதில் லட்சுமணன் என்பவர் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் முத்திரை இடப்படவில்லை என்றால் சரிதான். அச்சிடப்பட்ட படிவத்தில் மற்ற விவரங்கள் பின்னிட்டு நிரப்பப்பட்டுள்ளன என்றால் சரிதான். அந்த விவரங்களை நிரப்பிய நபரின் பெயர் அல்லது கையொப்பம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் மீட்டிங்கில் கடன் வாங்குவது சம்பந்தமாக ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் மேற்படி கடனுக்காக ஏதேனும் உத்தரவாதம் கொடுத்தார்களா என்றால் இல்லை, நான் வழக்கமாக வாங்குவதுபோல் வா.சா.ஆ.1 ஆவணம் மட்டும் எழுதி வாங்கினேன். ஒரு நபருக்கு ரொக்கமாக 2 லட்ச ரூபாய்க்கு மேல் கொடுக்க முடியாது என்ற வருமான வரி சட்டம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

5) வா.சா.ஆ.2 காசோலை எனக்கு 15.07.2022 அன்று கொடுக்கப்பட்டது. மேற்படி காசோலையை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் தாக்கல் செய்தேன். அந்த கணக்கு எண். 316755 ஆகும். இந்த கணக்கு எப்போது தொடங்கப்பட்டது என்றால் தோராயமாக 03.08.2022 அன்று தொடங்கப்பட்டது. இந்த காசோலை தாக்கல் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் தான் மேற்படி கணக்கு தொடங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 காசோலை வங்கிகளில் பழைய முறைப்படி பிரிண்ட் செய்து வழங்கப்பட்ட காசோலை

என்றால் சரிதான். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை எதிர்த்து நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) பிராதில் நான் குறிப்பிட்டுள்ள வகையாட்கள் யார் என்பதும் எப்போது அவர்கள் மூலமாக பணத்தை திரும்ப கேட்டேன் என்றால் எனது மனைவியின் சகோதரர் முப்புடாதி என்பவர் மூலமாக கேட்டேன். என்று போய் அவர் பணத்தை திரும்ப கேட்டார் என்றால் அந்த தேதி எனக்கு நியாபகமில்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான். நான் 1 கோடி ரூபாய் கடன் கொடுத்த விவரத்தை வருமான வரி கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை, பிரதிவாதி வழக்கமாக கைமாற்று வாங்குவார், பின்னர் அதை திரும்ப செலுத்திவிடுவார் என்பதால் அதை குறிப்பிடவில்லை. கடந்த 10.01.2021ம் தேதி மதியம் 3 மணியளவில் எனது வீட்டில் வைத்து 1ம் பிரதிவாதிக்கு பணத்தை கொடுத்தேன். 500 ரூபாய் நோட்டுக்களாக 200 கட்டுகள் கொடுத்தேன்.

7) இந்த வழக்கில் 3ம் நபர் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ள முருகன் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி முருகன் என்னிடம் பணம் வசூலிக்கும் பணி செய்யும் வேலை ஆள் என்றால் சரியல்ல. நான் மேற்படி முருகன் மூலமாக 3ம் பிரதிவாதியின் மீது இதே நீதிமன்றத்தில் OS No. 11/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிதிவாதி என்னுடைய சொத்துக்களை வில்லங்க பாராதீனம் செய்ய முயற்சிசெய்கிறார் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி யார் என்றால் சங்கரன் என்பவராவார். அவருடன் எனக்கு பழக்கம் கிடையாது. 2வது சாட்சி முத்துக்கிருஷ்ணனுக்கும் எனக்கும் எந்த பழக்கமும் கிடையாது. மேற்படி முத்துக்கிருஷ்ணன் தான் வா.சா.ஆ.1 ஆவணத்தை நிரப்பினார்.

8) ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் 1995ம் ஆண்டு கம்பெனி சட்டம் 1956ன் படி தொடங்கி டெரி டவல் துண்டு தயாரிக்கும் தொழில் செய்துவருகிறார் என்றால் சரிதான். 2005ம் ஆண்டு முதல் 1ம்

பிரதிவாதி அவ்வப்போது தனது வியாபாரத்திற்காக என்னிடம் சிறு கைக்கடன் வாங்கி அதனை சரியாக திரும்பி செலுத்திவிடுவார் என்றால் 2015 க்கு பின்னர் தான் வாங்குவார். 1ம் பிரதிவாதி கடந்த 2009 ஜனவரி மாதம் 3 பைசா வட்டிக்கு கைக்கடனாக ரூ.10 லட்சம் பெற்றார் என்று சொன்னால் சரியல்ல. அப்போது 1ம் பிரதிவாதி 3 நிரப்பப்படாத புரோநோட்டுகளில் கையொப்பம் இட்டு கொடுத்துள்ளார் என்றும், நிரப்பப்படாத நீதிமன்றமல்லாத பத்திரங்களில் கையொப்பம் இட்டு கொடுத்துள்ளார் என்றும், பச்சை நிறம் மற்றும் வெள்ளை தாள்கள் மூன்றில் பிரதிவாதி கையொப்பமிட்டு கொடுத்துள்ளார் என்றும் அந்த கடனுக்காக அவருடைய சங்கரன் கோவில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் நடப்பு கணக்கு எண். 13915033089001 என்ற கணக்கிலிருந்து கையெழுத்திடப்பட்டு நிரப்பப்படாத காசோலையும் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட நடப்பு கணக்கு எண் குறுகிய காலத்திலேயே முடிக்கப்பட்டு அந்த கணக்கிலிருந்த நிலுவை தொகை மற்றொரு நடப்பு கணக்கு எண். 13915032885031 என்ற கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9) 1ம் பிரதிவாதி 983055, 983056 மற்றும் 983057 ஆகிய மூன்று காசோலைகளை நிரப்பாமல் கையெழுத்திட்டு என்னிடம் கொடுத்துவிட்டு ஏற்கெனவே கையொப்பமிட்டு கொடுத்த காசோலைகளை பெற்றுசென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி குறுகிய கால கைக்கடனை பிப்ரவரி மாதம் 2009 லேயே திரும்ப செலுத்தி முடித்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு 1ம் பிரதிவாதி கடனை திரும்ப செலுத்தியபோது, அவர் கொடுத்த நிரப்பப்படாத ஆவணங்களை திரும்ப கேட்ட சமயத்தில் அவற்றை எங்கேயோ தொலைத்துவிட்டதாக நான் அவரிடம் பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 1ம் பிரதிவாதிக்கு உறவினர் என்ற முறையிலும், ஏற்கெனவே கொடுக்கல், வாங்கல் இருந்ததாலும் தொலைந்த ஆவணங்களை திரும்ப தேடி எடுத்துக்கொடுத்துவிடுவேன் என்று நான் கூறியதன் அடிப்படையிலும் 1ம் பிரதிவாதி மேற்படி ஆவணங்களை வாங்காமல் விட்டுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

10) 1ம் பிரதிவாதி பிப்ரவரி 2009 க்கு பிறகு எனது வட்டி விகிதம் அதிகமாக இருந்த காரணத்தினால் என்னிடம் வேறு எந்த கடனும் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் நடப்பு கணக்கு எண். 13915032885031 என்றும் அந்த கணக்கு கடந்த 16.02.2009 அன்றே முடிக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. 1ம் பிரதிவாதி தனது வேலை பளுவின் காரணமாக ஜனவரி 2009, பிப்ரவரி 2009ல் கொடுத்த நிரப்பப்படாத ஆவணங்களை திரும்ப பெற மறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கடந்த 01.04.2022 தேதி முதல் ஜெய்சர் ஸ்பின்டெக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திலிருந்து விலகிவிட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 26.04.2022 அன்று நிறுவன பதிவாளர் முன்னிலையில் 1ம் பிரதிவாதி விலகிய விவரம் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி எந்த கடனும் பெறாத நிலையில் 13 வருடங்களுக்கு முன்பாக கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத ஆவணங்களை பயன்படுத்தி பொய்யான ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11) எனது மனைவி பிரதிவாதிகளுக்கு 1 கோடி ரூபாயை ரொக்கமாக பல தவணைகளில் கொடுத்து அதற்கான வட்டியையும் சேர்த்து 1,17,83,000/- கொடுத்ததாக 01.06.2021ம் தேதி சம்மத கடிதம் கொடுத்ததாக கூறி அதே தேதியில் திரு. ஜெகநாதன் 15.07.2022 தேதியிட்ட காசோலை எண். 983056 கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மனைவியின் கூற்றுப்படி பார்த்தால்கூட அந்த காலக்கட்டத்தில் பிரதிவாதிகள் தரப்பில் எனக்கு சுமார் 12 லட்ச ரூபாய் வட்டி நிலுவையில் இருந்துவந்தது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு எனது மனைவி பிரதிவாதிகளுக்கு கடன் கொடுத்தது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நான் பிரதிவாதிகளிடம் சொத்து கிரையம் வாங்கும் போது அதற்குரிய தொகையை செலுத்தவேண்டிய அவசியம் இருந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. ஏற்கெனவே கொடுத்த கடன்தொகை மற்றும் வட்டி திரும்ப வராத நிலையில்

மேலும் பணத்தை கடனாக கொடுத்ததாக சொல்வது ஏற்கும்படி இல்லை என்று சொன்னால் சரியல்ல.

12) எனது மனைவி தாக்கல் செய்த மற்றொரு வழக்கான OS No. 61/2024 ல் 20.01.2021 ல் மேலும் ஒரு 1 கோடி ரூபாய் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் நான் சொன்னதுபோல் எந்த கடனும் என்னிடம் பெறவில்லை என்றும், 2009 ல் பெற்ற கைக்கடனை பெறும்போது வழங்கப்பட்ட ஆவணங்களை மோசடியாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் பல வங்கி கணக்குகள் இருக்கும்போது, வா.சா.ஆ.2 பழைய தனித்துவமற்ற காசோலை என்றும் அதனை எனது வங்கி கணக்கில் செலுத்தி அதன் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) நான் எந்த வகையாட்களையும் அனுப்பி நான் கொடுத்த பணத்தை திரும்ப கேட்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன் நான் பிரதிவாதிகளுக்கு எந்த சட்ட அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரிதான். முதலில் எனது மனைவிதான் 02.09.2022 ம் தேதியிட்ட ஒரு சட்ட அறிவிப்பை வழக்கறிஞர் ஆறுமுகம் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி 17.09.2022 ம் தேதியிட்ட பதிலறிவிப்பை வழக்கறிஞர் ஆறுமுகம் மற்றும் வைத்தியநாதன் ஆகியோருக்கும் அதன் நகலை எனக்கும் எனது மனைவிக்கும் அனுப்பினார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அந்த அறிவிப்பை 23.09.2022 அன்று நானும் எனது மனைவியும் பெற்றுக்கொண்டோம் என்றால் எனது மனைவி கையொப்பம் போட்டு வாங்கியுள்ளார். நான் 17.09.2022 ம் தேதியிட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டு அதிலுள்ள சங்கதிகளை மறுத்து பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பினை வழக்கறிஞரும் பெற்றுக்கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 17.09.2022 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பிலேயே உண்மை சங்கதிகளை பிரதிவாதிகள் விவரித்துள்ளனர் என்றும், எதிர் வழக்குரையிலும் உண்மை

சங்கதிகளை குறிப்பிட்டுள்ளனர் என்றும் அதனை மறுத்து நாங்கள் பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் அதிக வட்டி வசூல் செய்த காரணத்தினால் பிரதிவாதி மீண்டும் என்னிடம் கடன் பெறவில்லை என்ற முன்விரோதத்தில் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ரொக்கமாக 1 கோடி ரூபாய் கடன்கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எனது மனைவி ரூபாய் 1 கோடி ரூபாயை கடனாக கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. அந்த பொய்யை மறைப்பதற்காக நான் முன்னுக்குப்பின் முரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 கோடி ரூபாய் கடன் கொடுத்தது சம்பந்தமாக வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்று நான் சொல்வது பொய் என்றும், நான் எந்த பணமும் கொடுக்காத காரணத்தினால்தான் வருமான வரி கணக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi
Date: 2025.07.18 18:28:53 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.** 372/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சங்கரன் **Pw2** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள முதல்சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்து **வா.சா.ஆ. 5** ஆகும்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் விசைத்தறி வைத்து தொழில் செய்துவருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு ஏதும் அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை.

வழக்கறிஞரும், வாதி சுப்பையாவும் என்னிடம் சொன்னதால் நான் இன்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி சுப்பையாவை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் கடந்த 10.01.2021ம் தேதி சுப்பையா வீட்டில்வைத்து ஜெகநாதன், முத்துக்கிருஷ்ணன் மற்றும் நான் ஆகியோர் இருந்த சமயத்தில் எழுதப்பட்டது. ஜெகநாதன்தான் என்னை சுப்பையாவின் வீட்டிற்கு அழைத்து சென்றார். மாலை 3 மணிக்கு மேல் மேற்படி ஆவணம் எழுதப்பட்டது. 500 ரூபாய் நோட்டுகளாக 200 கட்டுகளை சுப்பையா ஜெகநாதனிடம் கொடுத்தார். அன்று என்ன கிழமை என்பது எனக்கு நியாபகமில்லை. எனது திருமண தேதி 28.05.1990 ஆகும். எனக்கு குழந்தைகள் கிடையாது. ஜெகநாதனும், முத்துக்கிருஷ்ணனும் சேர்ந்து வந்தபோது, ஜெகநாதன் என்னையும் சுப்பையாவின் வீட்டிற்கு அழைத்து சென்றார். சுப்பையா தனது வீட்டில் வைத்து 1 கோடி ரூபாய் பணத்தை ஜெகநாதனிடம் கொடுத்தார். அப்போது எங்கள் நான்கு பேரை தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை.

சுப்பையாவின் மனைவிக்கு கொடுக்கப்பட்ட புரோநோட்டிலும் நான்தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் அது எனக்கு நியாபகமில்லை. இதுவரை சுப்பையாவிற்காக எத்தனை புரோநோட்டுகளில் நான் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் யார் அழைத்தாலும் சென்று கையெழுத்து போடுவேன். தற்போது வரை வேறு யார் அழைத்தும் நான் கையெழுத்துபோடவில்லை. வேறு சாட்சி கையெழுத்துக்கள் போட்டுள்ளேனா என்றால் நியாபகமில்லை. சுப்பையா சார்பாக நான் வேறு நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை. நான் சுப்பையாவிற்கு வேண்டிய நபர் என்றும், பிரதிவாதி ஜெகநாதனை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, எனக்கு சுப்பையாவையும் தெரியும், ஜெகநாதனையும் தெரியும். எங்கள் வீட்டிற்கும் சுப்பையாவின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் எனது தெருவிற்கு அடுத்த தெருவில்தான் சுப்பையாவின் வீடு உள்ளது. நாங்கள் அனைவரும் வீட்டிற்குள் நுழையும்போது 3 மணி இருக்கும். ஜெகநாதன் 1 கோடி

ரூபாய் பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்துவிட்டுதான் புரோநோட்டில் கையொப்பமிட்டார். பணம் எண்ணும் எந்திரம் மூலம் பணத்தை எண்ணிப்பார்த்ததார். சுமார் ஒன்றரை மணி நேரம் எண்ணிப்பார்த்திருப்பார். அந்த நேரம் முழுவதும் நாங்கள் அனைவரும் அதே வீட்டில்தான் இருந்தோம். சுப்பையா கடவுள் பக்தி மிகுந்த நபர் என்றால் சரிதான். மொத்த பணமும் எண்ணிப்பார்க்கப்பட்டு, அதன் பின்னர் தான் புரோநோட்டும் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

வா.சா.ஆ–1 ஆவணத்தில் என்ன வாசகம் எழுதப்பட்டிருந்தது என்றால் தொழில்முறைக்காக ஜெகநாதன் கடன்வாங்கியதாக எழுதப்பட்டிருந்தது. புரோ நோட்டு எழுதுவதற்கு சுமார் அரை மணி நேரம் ஆனது. 10.01.2021 அன்று ஞாயிற்றுக்கிழமை என்றும், பணம் கொடுத்ததாக சொல்லப்படும் சமயம் ராகு காலம் என்றும், அப்போது யாரும் பணம் கடனாக கொடுக்க மாட்டார்கள் என்றும்சொன்னால் சரியல்ல. எனக்கு பிரதிவாதியை தெரியாது என்றும், வாதியை தெரியும் என்பதால் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் 10.01.2021 அன்று வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்படவில்லை என்றும் அதில் நான் வாதிக்காக கையொப்பமிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்காக மற்ற புரோநோட்டுகளிலும் சாட்சி கையொப்பமிட்டுள்ளேன் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi
Date: 2025.07.18 18:28:59 +0530